**தேசிய பாதுகாப்பு நிதியம் - 2022**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான “சிறப்பாகத் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ரூபா 53,314,521 தொகையான நிலையான வைப்புக்கள் ரூபா 54,389,574 ஆக முதிர்ச்சியடைந்து மீள் முதலீடு செய்யப்பட்டு மீண்டும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த வைப்புக்கள் ரூபா 53,314,521 ஆக நிதிக் | நிலையான வைப்புக்கள் முதிர்ச்சியடைந்ததன் பின்னர் புதிய பெறுமதி ரூபா 54,389,574 ஆக சரிசெய்வதற்கு பதிவுகள் இடப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டில் முதலீடு மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 1,075,054 வீதம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | ரூபா 200 மில்லியன் நிலையான வைப்பொன்று முதிர்ச்சியடைவதற்கு முன் 2022 ஆகஸ்ட் 02 ஆம் திகதி மாற்றப்பட்டிருந்ததுடன், அதற்காக மீளாய்வாண்டில் 213 நாட்களுக்குரியதாக கிடைத்த ரூபா 1,464,152 வட்டி வருமானம் முன்னைய ஆண்டின் இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 1,464,152 முதலீட்டு வருமானம் கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | இந்த வைப்புக்களுக்குரிய 2021.12.31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வட்டி வருமானமாக ரூபா 1,989,041 முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த நிலையான வைப்புக்கள் 2022.08.02 ஆம் திகதி மாற்றப்பட்டதால் கிடைத்த ரூபா 1,910,959 வட்டி வருமானம் முன்னைய ஆண்டின் கிடைக்க வேண்டிய வட்டி வருமானத்திலும், வேறுபாடான ரூபா 78,082 தொகை திரண்ட நிதியத்திலும் சீராக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்குரியதாக கிடைத்த வருமானம் அந்த காலப்பகுதியின் வருமானத்தில் சீராக்கப்படல் வேண்டும். |
| (இ) | பொலிஸ் திணைக்களம் மற்றும் இலங்கை விமானப் படைக்கு 2022 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட நிர்வாக செலவினப் பணத்தில் ரூபா 109,706 மீண்டும் கிடைத்திருந்த போதும் அது முன்னைய ஆண்டின் இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பொலிஸ் திணைக்களம் மற்றும் விமானப் படைக்கு 2022 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட நிர்வாக செலவினப் பணம் 2021 ஆம் ஆண்டில் மெத் செவன செயற்திட்டத்திற்கு உரியதாக வழங்கப்பட்ட நிர்வாக பணத்தை மீள பெறப்படும் வரை அந்த பணம் முன்னைய ஆண்டில் சீராக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் போது ஏற்பட்ட செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீண்டும் பெறப்பட்ட பணம் அந்த காலப்பகுதியில் சீராக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | பகுதி வீடமைப்பு திட்டத்தின் நிர்வாக செலவினத்திற்காக இலங்கை விமானப் படைக்கு வழங்கப்பட்ட பணத்தை பயன்படுத்தி அங்கீகாரம் இன்றி கொள்வனவு செய்யப்பட்ட | பகுதி வீடமைப்பு திட்டத்திற்குரிய முப்படைகள் மற்றும் இலங்கை பொலிஸினால் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் செலவினம், வாகன வாடகை | கட்டுப்பாட்டு முறையை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| ரூபா 330,000 ஆன அச்சிடல் இயந்திரம் மற்றும் கணனி திரை (Monitors) இரண்டு என்பவற்றின் பெறுமதி இலங்கை விமானப் படையில் இருந்து அறவிட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதும், அது நிதியத்திற்கு அறவிட வேண்டிய பணமாக இனங்காணப்படாதிருந்ததுட ன், நிர்வாக செலரவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | காகிதாகிகள் போன்ற செலவினங்களுக்கான நிர்வாக செலவினங்களை வழங்குதல் நிதியத்தின் நிர்வாக சபையின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்ட போதும் அந்த பணத்தை செலவிட்டு அச்சிடல் இயந்திரம் மற்றும் கணனி திரைகள் கொள்வனவு செய்வதற்காக நிர்வாக சபையின் அங்கீகாரம் பெறப்படாதிருந்தமையா ல் அந்த பணம் இலங்கை விமானப் படையில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| விடயம் | தொகை (ரூபா) | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| வீட்டு நிதி உதவி தவணைப் பணம் செலுத்துதல். | 48,936,509 | தெரிவு செய்யப்பட்ட 150 நலனாளிகளுக்கு இந்த மெத் செவன பகுதி வீடமைப்பு நிதி உதவி பணம் செலுத்துவதற்காக ரூபா 101,426,861 தொகை முப்படைகள் மற்றும் பொலிஸின் கணக்குகளுக்கு விடுவிக்கப்பட்ட போதும் 82 நலனாளிகளுக்கு செலுத்த வேண்டிய ரூபா 48,936,509 தொகை மீளாய்வாண்டில் அந்த நலனாளிகளுக்கு கிடைத்திருந்தமையை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் தற்போது உறுதிப்படுத்தல் அறிக்கை ஒவ்வொரு படையினரிடம் இருந்தும் மற்றும் உரிய நலனாளிகளிடம் இருந்து பெறப்படுவதுடன், அந்த உறுதிப்படுத்தல் அறிக்கை தற்போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் பெறவேண்டிய உறுதிப்படுத்தல் அறிக்கை காணப்படுவதுடன் அந்த அறிக்கை கிடைத்ததும் உடனடியாக கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்தப்படுகின்ற வீட்டு நிதி உதவி பணம் பெறப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கான திட்டமொன்று அமுல்படுத்துதல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) மற்றும் வழிகாட்டி 04 | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் நிதியத்தின் செயல் முன்னேற்றம் மீளாய்வு செய்யக் கூடிய வகையில் நிதியத்தின் பிரதான பணிகள் தொடர்பாக காலாண்டு ரீதியான அறிக்கை தயாரித்து காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2022 ஆம் ஆண்டிற்காக அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) இன் பிரகாரம் காலாண்டு ரீதியான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) மற்றும் வழிகாட்டி 04 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 முதலீட்டு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிலையான வைப்பை மாற்றுதல் மற்றும் ஏனைய வருமானங்கள் மூலம் நிதியத்தின் செலவினங்களை செய்ததன் பின்னர் மேலும் மிகையாக உள்ள நிதியம் குறுங்கால முதலீட்டு சந்தர்ப்பங்களில் ஈடுபடுவதற்கு முடியுமாக காணப்பட்ட போதும் 2022 சனவரி முதல் ஏப்ரல் வரை 04 மாத காலத்தில் ரூபா 1,200,000 மிகை பணமும், 2022 மே முதல் திசெம்பர் 31 வரை 07 மாத காலத்தில் ரூபா 4,000,000 மிகை பணமும் முதலீடு செய்யப்படாமல் நடைமுறைக் கணக்கில் காணப்பட்டது. | வீடமைப்பு செயற்திட்டத்தின் கொடுப்பனவுகளுக்காக வருமானம் போதியளவில் இல்லாமையினால் கொடுப்பனவை மேற்கொள்வதற்காக நிலையான வைப்புக்கள் மாற்றப்பட்டு அந்த பணம் நடைமுறைக் கணக்கில் வைக்கப்படுகின்றது. அவ்வாறே மாற்றப்பட்டு பெறப்படுகின்ற பணம் குறைபயன்பாடு இன்றி ஆக்கபூர்வமான முதலீடுகளுக்காக ஈடுபடுத்தப்படும் என குறிப்பிடுகின்றோம். | திட்டங்களுடன் செலவினங்களை செய்தல் மற்றும் மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கான வேலைத் திட்டமொன்றை அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 மே மாதத்தின் போது நாட்டில் ஏற்பட்ட வட்டி விகிதம் அதிகரித்து சென்றமையின் காரணமாக குறைந்த வட்டி விகிதத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்ட ரூபா 616.96 மில்லியன் நிலையான வைப்புக்கள் முதிர்ச்சி அடைவதற்கு முன்னர் மாற்றப்பட்டு 2022 ஆகஸ்ட் 02 மற்றும் 10 ஆம் திகதிகளின் போது மீள் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இந்த மீள் முதலீடு தொடர்பான தீர்மானம் எடுத்தல் இரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தாமதம் அடைந்ததன் காரணமாக வட்டி விகிதம் அதிகரிப்பில் ஏற்பட்ட நலன்களை அடைந்து கொள்ளும் வகையில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் தாமதமான 72 நாட்களுக்காக இழக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வட்டி வருமானம் ரூபா 22 மில்லியனுக்கு அதிகமாகும். | 2022 மே மாதம் முதல் வங்கி வட்டி விகிதம் உயர்வடைந்து செல்ல ஆரம்பித்ததுடன், அந்த காலத்தில் தேசிய பாதுகாப்பு நிதியம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்பட்டது. அந்த காலத்தில் நிலையான வைப்பினை மீள் முதலீடு செய்தல் மேற்கொள்ளப்படவில்லை. 2022.06.09 ஆம் திகதிய 2283/34 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிஷ குடியரசின் அதிவிஷேட வர்த்தாமானியின் மூலம் தேசிய பாதுகாப்பு நிதியம், பாதுகாப்பு அமைச்சின் விடயப்பரப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் குறைந்த வட்டி வீதத்தின் கீழ் காணப்பட்ட முதலீடுகளை அதிக வட்டி வீதத்தின் கீழ் மீள் முதலீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2022 மே மாதத்தில் காணப்பட்ட வட்டி வீதமும் படிப்படியாக அதிகரித்து காணப்பட்டதுடன் தேசிய பாதுகாப்பு நிதியத்தில் காணப்பட்ட முதலீடுகள் மீள் முதலீடு செய்யப்பட்ட 2022 ஆகஸ்ட் மாதம் வரையில் வட்டி விகிதம் 26 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. | நிதியத்தின் பிரதான வருமான மூலம் வட்டி வருமானமாக இருந்தமையால் முறையாக முதலீட்டு முகாமைத்துவமொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 17,189,698 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 34,987,345 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 17,797,647 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்காக நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மெத்செவண பகுதி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் படை வீரர்களுக்கு ஒரு பகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக 2022 ஆம் ஆண்டின் போது 150 நலனாளிகளுக்கு ரூபா 750,000 வீதம் ரூபா 112.50 மில்லியன் நலன்கள் செலுத்தி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், அந்த ஆண்டில் எந்தவொரு தவணைப் பணமும் செலுத்துவதற்கு தவறியிருந்தது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டில் 30 வீட்டு நலனாளிகளுக்காக மூன்றாவது தவணைப் பணம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கொடுப்பனவுகள் தாமதமடைந்தமை மற்றும் நிர்மாணங்கள் தாமதமடைந்தமை இதற்காக தாக்கமளித்திருந்தது. | 2020 ஆண்டில் காணப்பட்ட தொற்று நோய் நிலைமையின் காரணமாக அந்தந்த ஆண்டுகளுக்குரிய வீடமைப்பு செயற்திட்டங்களை அந்த ஆண்டின் போதே பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. அந்த தாக்கங்களின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் பகுதி வீடமைப்புத் திட்டத்தில் முதலாவது தவணைப் பணம் 2022 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் வரை தாமதமடைந்திருந்தது. அந்த காலப்பகுதியில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையின் இடையே மூலப்பொருட்களின் விலைகள் அதிகரித்தமையின் அடிப்படையில் வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தன. 2023 ஆம் ஆண்டின் போது இந்த நலனாளிகளை உள்ளடக்கிய ஒரு செயற்திட்டமாக அமுல்படுத்துவதற்கு நிர்வாக சபை மேவுகை அங்கீகாரம் கிடைத்துள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மரணமடைந்த மற்றும் ஊனமுற்ற படை வீரர்களின் 2021 ஆம் ஆண்டில் 05 ஆம் ஆண்டின் | 2021 ஆம் ஆண்டில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் உள்ள 80 படை வீரர்களின் பிள்ளைகள் தெரிவு | அந்தந்த ஆண்டில் திட்டமிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைவதற்கு மாணவர்களுக்கு |

| | | |
|---|---|---|
| புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 140 மாணவர்களுக்ககாக ரூபா 25,000 வீதம் புலமைப்பரிசில் கையளித்தல் 2022 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் புலமைப் பரிசில் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட்டிருந்ததுடன், அந்த புலமைப் பரிசில் கையளித்தலை விரைவாக மேற்கொள்ளுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கால ரீதியில் நலன்களை கையளிப்பதற்கும் முயற்சி எடுத்தல் வேண்டும். |

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை விமானப் படையின் நலனாளிகளுக்கு செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 4,719,806 பகுதி வீடமைப்பு தவணைப் பணம் இலங்கை விமானப் படையின் உத்தியோகபூர்வ கணக்கின் மூலம் நலனாளிகளுக்கு விடுவிக்க வேண்டியிருந்த போதும் உத்தியோகபூர்வ கணக்காக உறுதிப்படுத்தப்படாத ''மத்திய நலன்புரி மற்றும் புனரமைப்பு நிதியம்'' என்ற பெயரில் பேணிச் செல்லப்படுகின்ற வெளிவாரி நிதியம் ஊடாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தவணைப் பணம் தாமதமின்றி நலனாளிகளுக்கு வழங்குவதற்காக இலங்கை விமானப் படையின் மூலம் ''மெத் செவண'' பகுதி வீடமைப்புத் திட்டத்திற்குரிய பணம் மத்திய நலன்புரி மற்றும் புனரமைப்பு நிதியத்திற்கு அனுப்புமாறு கோரப்பட்டிருந்ததுடன், அதற்காக நிர்வாக சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதியத்தால் நேரடியாக நலன்களை செலுத்துவதற்கோ அல்லது அரச நிதியம் ஊடாக செலுத்துவதற்கோ முழுமையான உறுதிப்படுத்தலுடன் கணக்கொன்றின் மூலம் பணம் விடுவித்தலை பரிந்துரை செய்தல் வேண்டும். |

**3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் உள்ளபடியான செலவினம் தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் வருடாந்த நிர்வாக செலவினத்திற்காக பணம் வழங்கப்பட்டதன் காரணமாக நிதியத்திற்குரிய ரூபா 1,490,066 தொகை 03 வருடங்களுக்கு அண்மித்த காலம் பொலிஸ் திணைக்களம் மற்றும் இலங்கை கடற் படையின் பொறுப்பில் விளைவற்று காணப்பட்டமையால் முதலீட்டு சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டிருந்தன. | நிர்வாக செலவினம் தொழிற்படு மூலதன தேவைக்காக உரிய படையினருக்கு வழங்கியதன் பின்னர் ஆண்டின் இறுதியில் கணக்குகளை தீர்ப்பதற்காக மிகுதி பணம் காணப்படுமாயின் அந்த பணம் அல்லது செலவிடப்பட்ட தொகைக்குரிய பற்றுச் சீட்டை பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது ஒவ்வொரு ஆண்டின் நிர்வாக செலவினத்தில் எஞ்சிய பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தயவுடன் அறியத்தருகின்றோம். | அந்தந்த ஆண்டின் உள்ளபடியான செலவினங்களை கவனத்தில் கொண்டு நிர்வாக செலவினம் வழங்க வேண்டியிருந்ததுடன், முறையான முதலீட்டு திட்டமொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1985 இன் 9 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டு வரை தேசிய பாதுகாப்பு நிதியம் நிதி அமைச்சின் கீழ் காணப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை அந்த அமைச்சின் மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து இந்த அமைச்சுக்கு அறிவித்தவுடன் 2018 ஆம் ஆண்டு முதல் 2022 வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | 1985 இன் 9 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |